## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்
## அ.வ.எண். 195/2007

பெயர் : தங்கராசு
சாட்சி – பி.வா.சா–1 நாள்: 25.06.2024

1987ம் வருடத்திய வகைமுறைச்சட்டம் பிரிவு 10ன்படி சாட்சி அழைக்கப்பட்டு அங்கனமே உள்ளார்ந்த உறுதி உரை செய்யப்பட்டு 2024 ஆண்டு ஜுன் மாதம் 25ம் நாள் சாட்சியம்.

---

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

தாவா சொத்து வாதி மற்றும் பிரதிவாதிகளிடையே பாகப்பிரிவினை இல்லாமல் கூட்டாக அனுபவித்து வருகிறோம் என்றால் சரியல்ல. வாதிகள் மற்றும் 1 முதல் 4 பிரதிவாதிகள் இணைந்து திருமூர்த்தி கவுண்டரின் வேறு சில சொத்துக்களை கிரையம் செய்து கொடுத்துள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். எந்த காலையில் எத்தனை ஏக்கர் விற்றார்கள் என்றோ எவ்வளவு தொகைக்கு விற்றார்கள் என்றோ எனக்கு தெரியாது. கிரைய பத்திரங்களில் யார் சாட்சி கையொப்பம் போட்டுள்ளார்கள் என்றால் சாரதி மற்றும் உதயகுமார் ஆகியோர் ஆவார்.

2. 28.02.2007 அன்று நான் கிரையம் நடந்த போது சார்பதிவாளர் அலுவலகம் செல்லவில்லை என்றால் சரிதான். அந்த தேதியில் நான் 5ம் வகுப்பு படித்துக் கொண்டிருந்தேன் என்றும் இளவர் என்றும் சொன்னால் சரிதான். வாதிகள் விடுதலை ஆவணம் எழுதி கொடுத்தாக சொல்வது 28.02.2007 என்றால் சரிதான். அந்த தேதியிலும் நான் சார்பதிவாளர் அலுவலகம் செல்லவில்லை என்றால் சரிதான். கிரைய பத்திரம் எழுதி பதிவு செய்தது பற்றியோ விடுதலை ஆவணம் எழுதி கொடுத்ததாக சொல்வது பற்றியோ எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். எனது அப்பா என்னிடம் சொல்லியுள்ளார்.

3. எனது அப்பா எப்போது சொன்னார் என்றால் இந்த வழக்கு தாக்கல் செய்த பின்னர் சொன்னார். நான் சொல்வது பொய் என்றும், வழக்கு தாக்கல் செய்த போது எனக்கு 10 வயது தான் ஆகியிருந்தது ஆகையால் எனக்கு அதுபற்றி தெரிந்திருக்க வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. பி.வா.சா.1 ஆவணத்தை நான் எப்போது படித்து

பார்த்தேன் என்றால் 2016–2017 ஆண்டில் படித்து பார்த்தேன். பி.வா.சா.1 விடுதலை பத்திரத்தில் என்ன எழுதியுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியும். என்னென்ன காலையில் எவ்வளவு விஸ்தீரணம் பி.வா.சா.1 ஆவணத்தில் உள்ளது என்று எனக்கு தெரியாது என்றால் எனக்கு நினைவில்லை.

4. பி.வா.சா.1 ஆவணத்தில் அடித்தல் திருத்தல் உள்ளதா என்றால் எனக்கு நினைவில் இல்லை. எத்தனை பங்கு விடுவிப்பதாக அதில் எழுதி உள்ளது என்றால் 10ல் 6 பங்கு விடுவிப்பதாக எழுதியுள்ளது. 10ல் 6 பங்கு எத்தனை ஏக்கர் என்றால் எனக்கு தெரியாது. பி.வா.சா.1 ஆவணத்தில் 5 ல் 4 பங்கு என்று எழுதியுள்ளது என்றால் சரிதான். அது தவறாக எழுதப்பட்டுள்ளது. 1ம் பிரதிவாதியுடன் எனக்கு நல்ல உறவுமுறை உள்ளது. எனது அப்பாவிற்கும் 1ம் பிரதிவாதிக்கும் இடையே நல்ல உறவுமுறை இருந்தது.

5. பி.வா.சா.ஆ.1 ல் ஒருவருடைய புகைப்படம் மட்டும் தான் ஒட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். மற்ற 3 வருடைய புகைப்படமும் ஒட்டப்படவில்லை என்றால் சரிதான். பி.வா.சா. 1 ன் மூல ஆவணம் எது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எனக்கு நினைவில்லை. பி.வா.சா.1 ஆவணத்தை மொத்தம் எத்தனை பேர் எழுதிக்கொடுத்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் 4 பேர் என்று உள்ளது. கருணாகரன் தற்போது என்ன தொழில் செய்கிறார் என்றால் அவர் வேலை எதுவும் செய்யவில்லை வீட்டில் தான் இருக்கிறார். பி.வா.சா.1 ஆவணத்தை யார் தயார் செய்தார் என்றால் ஆவணஎழுத்தர் ரவி என்பவர் தயார் செய்தார்.

6. எனது அப்பாவிற்கு வாதிகள் எந்த ஒரு விடுதலை ஆவணமும் எழுதி கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. பி.வா.சா.1 ஆவணத்தில் யார் சாட்சி கையெழுத்து சார்பதிவாளர் அலுவலகத்தில் போட்டார்கள் என்றால் சாரதி மற்றும் உதயகுமார் ஆவார்கள். சாரதி மற்றும் உதயகுமார் ஆகியோர்கள் எனது அப்பாவிற்கு தெரிந்தவர்கள் அவர்கள் எல்லோருக்குமே தெரிந்தவர்கள். வாதிகளுக்கு மேற்படி சாரதி மற்றும் உதயகுமாரை தெரியாது என்று சொன்னால் சரியல்ல. பி.வா.சா.1 தயார் செய்ய எனது அப்பா யாரிடம் முத்திரைத்தாள் வாங்கினார் என்றால் யாரிடம் இருந்து வாங்கினார் என்று எனக்கு தெரியாது.

7. எவ்வளவு ரூபாய்க்கு முத்திரைத்தாள் வாங்கினார் என்று எனக்கு தெரியாது. பி.வா.சா. 1 வாதிகள் எழுதிக்கொடுக்கவில்லை என்றும் அதில் உள்ள வாசகங்கள் மோசடியாக தயார் செய்யப்பட்டதென்றும் பொய் என்றும் சொன்னால் சரியல்ல. பி.வா.சா.1க்குரிய மூல ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் எனக்கு நினைவில்லை.

8. வாதிகளுக்கு பி.வா.சா.1 விடுதலை ஆவணத்தை எழுதி கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. வாதிகள் எனது தகப்பனாரிடம் இருந்து எந்த தொகையும் வாங்கவில்லை என்றால் சரியல்ல. எனது தந்தையும், 1ம் பிரதிவாதியான கருணாகரன் என்பவரும் சேர்ந்து வாதிகளிடம் இருந்து சொத்தை அபகரிப்பதற்காக பி.வா.சா.1 ஆவணத்தை மோசடியாக தயார் செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல.

9. 1ம் வாதிக்கு தற்போது வயது 80ற்கும் மேல் இருக்கும் என்றால் சரிதான். 1ம் வாதிக்கு படிப்பறிவு கிடையாது அவர் கைரேகை வைக்கும் தற்குறி என்றால் சரிதான். 2, 3 வாதிகளுக்கு படிப்பறிவு கிடையாது என்றால் சரியல்ல. வாதிகளின் அறியாமையை பயன்படுத்தி அவர்களின் சம்மதம் இல்லாமல் அவர்களுக்கு தெரியாமலேயே 28.02.2007 தேதியில் அவர்கள் வா.சா.3 கிரைய பத்திரம் எழுதும போது அதனுடன் சேர்த்து 1ம் வாதியிடம் கைரேகையும் 2, 3 வாதிகளிடம் கையெழுத்துக்களை எனது தகப்பனாரும் 1ம் பிரதிவாதி கருணாகரனும் சேர்ந்து வாங்கி பி.வா.சா.1 மோசடியாக உருவாக்கியுள்ளார் என்றால் சரியல்ல.

10. வாதிகள் வா.சா.3 கிரைய ஆவணத்தில் கைரேகை மற்றும் கையொப்பம் போடுவதாக நினைத்து தான் அதே தேதியில் கேட்ட கைரேகை மற்றும் கையொப்பம் ஆகியவற்றை போட்டுள்ளார்கள் என்றால் சரியல்ல. பி.வா.சா.1 ஆவணத்தில் இருந்த வாசகங்கள் வாதிகளுக்கு தெரியாது என்றும் யாரும் படித்து காண்பிக்கவில்லை என்றும், சொன்னால் சரியல்ல. 1ம் சாட்சி சாரதி எனது அப்பா மற்றும் 1ம் பிரதிவாதி கருணாகரன் ஆகியோருக்கு நெருக்கமானவர் என்று பின்னால் தெரியவந்தது என்றும், 2ம் சாட்சி உதயகுமார் யார் என்றே வாதிகளுக்கு தெரியாது என்றும், சொன்னால் சரியல்ல.

11. பி.வா.சா. 1 மோசடியாக உருவாக்கப்பட்டதால் செல்லத்தக்கதல்ல என்றும், இல்லநிலையது என்றும், வாதிகளை எவ்விதத்திலும் கட்டுப்படுத்தாது என்றும், நடைமுறைக்கு வராத சட்டவிரோதமான ஆவணம் என்றால் சரியல்ல. பி.வா.சா.1 ஆவணத்தின் அடிப்படையில் எனது அப்பாவிற்கு முழு உரிமையும், 1ம் அயிட்ட சொத்திற்கு வரவில்லை என்றால் சரியல்ல. வாதிகள் எனது அப்பா மற்றும் பிரதிவாகளுடன் சேர்ந்து ஆதியிலிருந்தே கூட்டு சுவாதீனத்தில் பாகம் பிரிக்காமல் அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. பி.வா.சா.1 ஆவணம் மோசடியானது என்பதால் அதகை இரத்து செய்ய வேண்டும் என்ற அவசியம் வாதிகளுக்கு ஏற்பட வில்லை என்றால் சரியல்ல.

12. வா.சா.1 ஆவணத்தில் என்னென்ன சொத்துக்கள் பாகப்பிரிவினை செய்யப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. எனது தாத்தா திருமூர்த்தி கவுண்டருக்கு என்னென்ன காலையில் என்னென்னசொத்துக்கள் ஒதுக்கப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். எனது தாத்தா வா.சா.2 ஆவணத்தின் அடிப்படையில் என்னென்ன சொத்துக்களை யாரிடம் இருந்து கிரையம் வாங்கினார் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். வருவாய்துறை ஆவணங்கள் அனைத்தும் யார் பெயரில் உள்ளது என்றால் எனது தாத்தா பெயரில் இருந்தது. தற்போது எனது அப்பா பெயரில் மாற்றப்பட்டுள்ளது.

13. 2007ம் ஆண்டில் தாவா சொத்துக்களுக்கு உண்டான பட்டா தாத்தா பெயரில் தான் இருந்தது என்றால் எனக்கு நினைவில்லை. வா.சா.4 ல் வில்லங்கம் போட்டு பார்த்தபின்பு தான் எனது அப்பா மற்றும் 1ம் பிரதிவாதி இருவரும் மோசடியாக பி.வா.சா.1 உருவாக்கியுள்ள விவரம் வாதிகளுக்கு தெரியவந்தது என்றால் சரியல்ல. அதன் பின்னர் தான் வாதிகள் பி.வா.சா.1ன் சான்றிட்ட பதிவு நகலை வா.சா.5 வாங்கி தனது வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு அனுப்பினார்கள் என்றால் சரியல்ல.

14. எனது அப்பா வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றுக்கொண்டு பதில் அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் அதுபற்றி எனக்கு நினைவில்லை. தாசில்தார், கிராம நிர்வாக அலுவலருக்கு அறிவிப்பு அனுப்பப்பட்தென்றும் அந்த அறிவிப்பை அவர்கள் பெற்றுக் கொண்ட பிறகும் எனது அப்பா செல்வாக்கை பயன்படுத்தி அவர்களை வருவாய்

ஆவணங்களை மாற்ற வைத்துள்ளார் என்றும் சொன்னால் சரியல்ல. எனது தகப்பனார் தனக்கு முழு உரிமை இல்லாமல் வருவாய் துறை ஆவணங்களை அவரது பெயருக்கு மாற்றியது சட்டபடி செல்லதக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. வா.சா.14 அஞ்சல் ஒப்புகை அட்டையில் உள்ள கையெழுத்து எனது அப்பாவினுடையது என்றால் சரிதான். வா.சா.17 முதல் 22 வரையிலான வருவாய் துறை ஆவணங்களில் தாத்தா திருமூர்த்திகவுண்டர், அவரது மனைவி 1ம் வாதி மாராத்தாள் பெயர்கள் உள்ளது என்றால் சரிதான்.

15. வழக்கு நிலுவையில் இருக்கும் போது வருவாய் துறை ஆவணங்களில் தாத்தா திருமூர்த்திகவுண்டர், அவரது மனைவி 1ம் வாதி மாராத்தாள் பெயர்களை நீக்கி விட்டு எங்களது பெயர்களை சேர்த்தது தவறானது, சட்டப்படியானது அல்ல என்று சொன்னால் சரியல்ல. வருவாய் துறை ஆவணங்களை வைத்துக்கொண்டு முழு உரிமை கோர முடியாது என்று சொன்னால் சரியல்ல. எனது தகப்பனார் கூட்டாகத்தான் தாவா சொத்தை அனுபவித்து வந்தார் என்றும், முழு உரிமையுடன் அனுபவித்ததில்லை என்றும், சொன்னால் சரியல்ல.

16. எனது தகப்பனார் இறந்த பின்னர் நானும் எனது தாயாரும் வாதிகளுடன் கூட்டாகத்தான் தாவா சொத்தை அனுபவித்து வருகிறோம் என்றால் சரியல்ல. தாவா 2ம் அயிட்ட சொத்து குறித்து திருமூர்த்தி கவுண்டரோ, அல்லது வாதிகளோ, எந்த ஆவணமும் எழுதிக்கொடுக்க வில்லை என்று சொன்னால் சரிதான். 2ம் அயிட்ட சொத்தினை பாக்ப்பிரிவினை செய்யப்படாமல் வாதிகளுடன் சேர்ந்து கூட்டு சுவாதீனத்தில் தான் அனுபவித்து வருகிறோம் என்றால் சரிதான். 1ம் அயிட்ட சொத்தில் 1ம் வாதிக்கு 4ல் ஒரு பங்கு உள்ளதாக நான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

17. 2ம் அயிட்ட சொத்தில் வாதிகளுக்கு 25ல் 13 பங்கு உரிமை உள்ளது என்றால் எவ்வளவு பங்கு என்று எனக்கு சரியாக தெரியாது. பி.வா.சா1 விடுதலை பத்திரம் வாதிகள் எழுதிக்கொடுக்கவில்லை என்பதால் தாவா 1 மற்றும் 2 அயிட்ட சொத்தில் வாதிகளுக்கு 25ல் 13 பங்கு பாகம் உள்ளது என்றால் சரியல்ல. எனது சாட்சிய வாக்குமூலத்தில் நான் குறிப்பிட்டுள்ள பங்கு விகிதாச்சாரம் சரியானதல்ல

என்றால் சரியல்ல. வாதிகள் சரியான சொத்து விவரம் மற்றும் பரிகாரம் கேட்டுத்தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல.

18. வாதிகள் படிக்காதவர்கள்என்பதாலும் மற்றும் 1ம் வாதி தற்குறி என்பதாலும் அவர்களை ஏமாற்றி மோசடி ஆவணம் தயார் செய்து பொய்யான சங்கதியின் அடிப்படையில் எதிர்வாதம் தயார் செய்தி பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது எதிர்வாதம் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றும் வழக்கு செலவு தொகையுடன் அனுமதிக்கப்படவேண்டும் என்றும் சொன்னால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிவடைந்தது**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

V KALIDASAN

Digitally signed by V KALIDASAN
Date: 2024.06.25 18:36:40 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பல்லடம்.